கோவில் நில ஆக்கிரமிப்புகளை அனுமதிக்க மாட்டோம்

வடபழனி கோவிலுக்கு சொந்தமான ரூ.250 கோடி சொத்து மீட்பு: அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி

சென்னை, ஜூன் 7–

வடபழனி கோவிலுக்கு சொந்தமான ரூ.250 கோடி மதிப்பிலான 5.5 ஏக்கர் நிலத்தை மீட்டுள்ளதாக இன்று இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

கோவில் நிலங்கள் தனியார்களால் ஆக்கிரமிக்கப்படுவதை இந்து சமய அறநிலைய துறை அனுமதிக்காது என்றும் அவர் கூறினார்.

தமிழகம் முழுவதிலும் 12 ஆண்டுகளாக திருப்பணிகள் நடைபெறாத கோவில்களை கணக்கெடுத்து கும்பாபிஷேகம் நடத்தப்படும் என்றார். இதனிடையே சென்னை வடபழனி முருகன் கோவிலில் கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. இதையொட்டி திருப்பணிகள் நடந்து வருகின்றன. இப்பணிகளை இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு நேற்று ஆய்வு செய்தார்.

அப்போது அவர் கூறுகையில், வடபழனி முருகன் கோயிலில் விரைவில் கும்பாபிஷேகம் நடத்தப்பட உள்ளது. இங்கு மணமக்கள் உடை மாற்றும் அறை, தங்கும் அறைகள் விரைவில் கட்டப்படும். தமிழகம் முழுவதிலும் 12 ஆண்டுகளாக திருப்பணி நடைபெறாத கோயில்களை கணக்கெடுத்து கும்பாபிஷேகம் நடத்தப்படும். தீ விபத்து நடந்த மண்டைக்காடு பகவதி அம்மன் கோயில், ஆகம விதிகளின்படி புனரமைக்கப்படும்.

அரசு மருத்துவமனைகளில் உள்ள கொரோனா நோயாளிகள், அவர்களது உதவியாளர்களுக்கு ஊரடங்கு முடியும் வரை இந்து சமய அறநிலைத்துறை சார்பில் தொடர்ந்து உணவு பொட்டலங்கள் வழங்கப்படும். சென்னையை பொருத்தவரை உணவுக்கு தட்டுப்பாடு இல்லை. உணவு இல்லாத நிலை ஏற்பட்டால் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

ரூ.250 கோடியில் 5.5 ஏக்கர் நிலம் மீட்பு

சென்னையில் வடபழனி கோவிலுக்கு சொந்தமான 250 கோடி மதிப்புள்ள சொத்துக்களை தமிழக அரசு மீட்டுள்ளது. சாலிகிராமம் காந்தி நகரில் தனியார் வளாகங்கள், கால்வாய்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த 5.5 ஏக்கர் நிலத்தை அறநிலையத்துறை மீட்டுள்ளது. மீட்கப்பட்ட கோவில் நிலங்களை அமைச்சர் பி.கே.சேகர் பாபு நேரில் சென்று பார்வையிட்டார்.

இதனைத்தொடர்ந்து அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், கோவில் நிலங்களில் குடியிருப்போர் யாரும் அந்த இடத்திற்கு உரிமைக்கோர முடியாது. கோவில் நிலங்கள் தனியார்களால் ஆக்கிரமிக்கப்படுவதை இந்து சமய அறநிலைய துறை அனுமதிக்காது. தமிழக அரசு 30 நாட்கள் நிறைவு செய்துள்ளது. இது டிரெய்லர் தான். இனி தான் மெயின் பிக்சர் பார்ப்பீர்கள். யார் தவறு செய்தாலும் சட்டம் தன் கடமையை செய்யும். தமிழகத்தில் உள்ள அனைத்து கோவில்களிலும் இனி தமிழில் அர்ச்சனை செய்யப்படும். எந்தெந்த கோவிலில் தமிழில் அர்ச்சனை செய்யப்படவில்லை என்பது கண்டறியப்படும். அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் திட்டத்தை விரிவுபடுத்துவது குறித்து முதலமைச்சர் தெரிவிப்பார் என்று அவர் கூறினார்.

கட்டுக்குள் கொரோனா: மு.க.ஸ்டாலினுக்கு எச்.வி.ஹண்டே பாராட்டு

சென்னை, ஜூன் 7–

அரசின் தடுப்புநடவடிக்கைகளால் தமிழகத்தில் கொரோனா தொற்று கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதற்கு முதலமைச்சர் ஸ்டாலினுக்கு எச்.வி.ஹண்டே பாராட்டு தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு 94 வயதான முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் எச்.வி.ஹண்டே எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:

கொரோனாவால் பெற்றோரை இழந்து ஆதரவற்ற நிலையில் உள்ள குழந்தைகளை பராமரிப்பது தொடர்பாக நீங்கள் அறிவித்த அறிவிப்பை விட, உங்களது பாசமிகு தந்தை கருணாநிதிக்கு சிறப்பான பிறந்தநாள் பரிசை அளித்திருக்கவே முடியாது. கோவையில் உள்ள மருத்துவமனையில் கொரோனா வார்டுக்கு சென்று நோயாளிகளை சந்தித்து நலம் விசாரித்தது எனக்கு மகிழ்ச்சி கலந்த ஆச்சரியத்தை அளித்தது.

எனக்கு பெருமை அளிப்பது என்னவென்றால் கோவை அரசு மருத்துவமனையில் 94 ஆண்டுகளுக்கு முன்பு நான் பிறந்தேன். எனது தந்தை டாக்டர் எச்.எம்.ஹண்டே அங்குதான் டாக்டராக பணியாற்றினார்.

நான் தங்களுக்கு ஒரு முக்கியமான வேண்டுகோளை விடுக்கிறேன். தயவு செய்து இதுபோல இடங்களுக்கு செல்லவேண்டாம். உங்களது ஆரோக்கியமே, தமிழகத்தின் மிக மிக முக்கியமான ஆரோக்கியமாகும். இரவு பகலாக உங்களது அயராத உழைப்பினால் தமிழகத்தில் கொரோனா 2ம் அலை பரவல் கட்டுப்படுத்தப்பட்டு உள்ளது. உங்களுடைய தொடர் வெற்றிகளுக்கு எனது வாழ்த்துகள்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை, மாநில வளர்ச்சி கொள்கைக் குழு துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள பேராசிரியர் ஜெ. ஜெயரஞ்சன், மாநில வளர்ச்சி கொள்கைக் குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள டி.ஆர்.பி. ராஜா எம்.எல்.ஏ ஆகியோர் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

★ மத்திய கணக்குத்தணிக்கை துறையை தணிக்கைக்கு உட்படுத்த வேண்டும்

★ மத்திய சிலை கடத்தல் தடுப்பு பிரிவை உருவாக்க வேண்டும்

தொன்மையான, புராதன கோவில்களை பாதுகாக்க வேண்டும்: தமிழக அரசுக்கு ஐகோர்ட் உத்தரவு

சென்னை, ஜூன். 7–

தமிகத்தில் தொன்மையான, புராதன கோவில்களை பாதுகாக்க வேண்டும் என்றும், கோவில்களின் கணக்குகளை மத்திய கணக்குத்தணிக்கை துறை தணிக்கைக்கு உட்படுத்தவும், சிலைகளை பாதுகாக்க மத்திய சிலை கடத்தல் தடுப்பு பிரிவை உருவாக்கவும் தமிழக அரசுக்கு சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் உள்ள தொன்மையான கோவில்களை பாதுகாப்பது தொடர்பாக, 2015 ம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்றம் தாமாக முன்வந்து வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டது. தமிழகத்தில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் 44 ஆயிரத்து 121 கோவில்கள் உள்ளன. இதில் 8,450 கோவில்கள் நூறு ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டவை. இவை புராதன கோவில்களாக கருதப்படுகின்றன. 44 ஆயிரம் கோவில்களில் 32 ஆயிரத்து 935 கோவில்கள் நல்ல நிலையில் இருப்பதாகவும், 6,414 கோவில்கள் சிறிய சீரமைப்புப் பணிகள் செய்ய வேண்டிய நிலையில் இருப்பதாகவும், 530 கோவில்கள் பாதி சிதிலமடைந்துள்ளதாகவும், 716 கோவில்கள் முழுமையாக சிதிலமடைந்துள்ளதாகவும் அறநிலையத் துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டது. பாதி சிதிலமடைந்த, முழுமையாக சிதிலமடைந்த இந்த கோவில்களை யுனெஸ்கோ விதிகளின்படி சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அறநிலையத் துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் ஆர்.மகாதேவன் மற்றும் பி.டி. ஆதிகேசவலு அடங்கிய அமர்வு இன்று முக்கிய தீர்ப்பை வழங்கியது. அதில், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தொன்மையான, புராதன கோவில்களை பாதுகாக்க வேண்டும் என உத்தரவிட்டனர்.

தமிழகம் முழுவதும் உள்ள கோவில்களின் பட்டியலை தயாரித்து, கோவில் நிலங்களை ஆக்கிரமிப்பில் இருந்து மீட்க வேண்டும். நிலங்களை வாடகைக்கு எடுத்தவர்களிடம் இருந்து பெற வேண்டிய வாடகை பாக்கியை வசூலிக்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளனர்.

கோவில்களில் உள்ள சிலைகள், நகைகள் உள்ளிட்டவற்றை பட்டியலாக தயாரிக்க வேண்டும்; கோவில்களில் ஸ்ட்ராங்க் ரூம் அமைத்து, இந்த சிலைகளை பாதுகாக்க நடடிக்கை எடுக்க வேண்டும்; அனைத்து மாவட்டங்களுக்கும் தகுதியான ஸ்தபதிகளை நியமிக்க வேண்டும் எனவும் உத்தரவில் குறிப்பிட்டுள்ளனர்.

ஓதுவார்கள், அர்ச்சகர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கவும், சீரமைப்புப் பணிகளை மேற்கொள்வது தொடர்பாக மாநில, மாவட்ட அளவில் குழுக்கள் அமைக்க வேண்டும் என தமிழக அரசுக்கு உத்தரவிட்டுள்ளனர்.

சிலைகள், நகைகளை புகைப்படம் எடுத்து அவற்றை இணைய தளங்களில் வெளியிட வேண்டுமென உத்தரவிட்ட நீதிபதிகள், ஆக்கிரமிப்பில் உள்ள நிலங்களை மீட்பதுடன், கோவிலுக்கு சொந்தமான நிலங்களுக்கான வாடகையை நிர்ணயிக்க வேண்டும் எனவும் அறநிலையத்துறைக்கு உத்தரவிட்டுள்ளனர்.

அறங்காவலர்களை நியமித்து அவர்களுக்கு ஊதியம் நிர்ணயிக்க வேண்டும் என்றும், பரம்பரை அறங்காவலர்களை அடையாளம் காண வேண்டும் எனவும் அறிவுறித்தி உள்ளனர்.

கோவில்கள் பாதுகாப்பு தொடர்பான விதிகளை உடனடியாக வகுத்து வெளியிட வேண்டும் என உத்தரவிட்டுள்ளதுடன், கோவில் நிலங்கள் உள்ளிட்ட விவரங்கள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு தனி தீர்ப்பாயம் அமைக்கவும் அரசுக்கு உத்தரவிட்டுள்ளனர்.

கோவில்களின் கணக்கு வழக்குகளை மத்திய கணக்குத் தணிக்கை துறை தணிக்கைக்கு உட்படுத்த வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளனர். மத்திய சிலைக் கடத்தல் தடுப்புப் பிரிவை அமைக்க வேண்டும் எனவும், கோவில்களுக்கு சொந்தமான நீர்நிலைகளையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென உத்தரவிட்டுள்ளனர்.

கோவில் நிலங்கள், சொத்துக்களை திருடியவர்கள், சேதப்படுத்தியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பன உள்ளிட்ட பல உத்தரவுகளை பிறப்பித்துள்ளனர்.

இந்த உத்தரவுகளை 12 வாரங்களில் அமல்படுத்த வேண்டும் எனவும், அது குறித்த அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும் எனவும் அரசுக்கு நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை, சுற்றுச்சூழல் – காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் சந்தித்து, கொரோனா நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பில் 20 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத் துறையின் முதன்மைச் செயலாளர் சுப்ரியா சாஹூ, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் தலைவர் ஏ.வி. வெங்கடாசலம், ஐஎப்எஸ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

கொரோனா சிகிச்சைக்கு கூடுதல் கட்டணம் வசூலித்தால் மருத்துவமனை உரிமங்கள் ரத்து

சென்னை ஐகோர்ட்டில் தமிழக அரசு விளக்கம்

சென்னை, ஜூன் 7–

கொரோனா சிகிச்சைக்கு கூடுதல் கட்டணம் வசூலிக்கும் மருத்துவமனைகளின் உரிமங்கள் ரத்து செய்யப்படுவதாக சென்னை ஐகோர்டில் தமிழக அரசு விளக்கம் அளித்துள்ளது.

கொரோனா சிகிச்சைக்கு அதிக கட்டணம் வசூலிக்கப்படுவதால், தனியார் மருத்துவமனைகளை அரசு, தன் கட்டுப்பாட்டில் எடுத்து இலவச சிகிச்சை வழங்க கோரி டி.ஐ.நாதன் என்பவர் ஐ கோர்ட்டில் வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கு தலைமை நீதிபதி சஞ்ஜிப் பானர்ஜி, நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி அடங்கிய அமர்வில் இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது, முதல்வரின் காப்பீட்டு திட்டத்தில் சேராதவர்கள் சிகிச்சை பெற ஏதுவாக தனியார் மருத்துவமனைகளுக்கு கட்டணம் நிர்ணயித்து அரசாணை பிறப்பித்துள்ளதாகவும், தற்போது அரசு மருத்துவமனைகளில் படுக்கைகள் உள்ளதால் அதை பயன்படுத்திக் கொள்ளலாம் என அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. மேலும், அரசு நிர்ணயித்த கட்டணத்தை விட அதிக கட்டணம் வசூலிக்கும் மருத்துவமனைகளின் உரிமத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், கூடுதல் கட்டண வசூல் தொடர்பாக புகார் அளிக்க தனி பிரிவு அமைக்கப்பட்டுள்ளதாகவும் அரசுத் தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டது.

இதை பதிவு செய்த நீதிபதிகள், கூடுதல் கட்டண வசூல் தொடர்பான புகார்களை முறையாக கையாண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் என அறிவுறுத்தினர். மேலும், மருத்துவமனைகள் லாப நோக்குடன் செயல்படுவது கண்டறிந்தால் அதன் மீது நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிட்டனர்.

மேலும், முதல்வரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்வதற்கான வருமான உச்ச வரம்பை இரண்டு மடங்காக அதிகரிக்க வேண்டும் எனத் தெரிவித்த நீதிபதிகள், இந்த விஷயத்தில் தமிழக அரசு, கருணையுடன் பரிசீலிக்கும் எனவும் நம்பிக்கை தெரிவித்து, வழக்கை முடித்து வைத்தனர்.

பெயர் மாற்றம்

Alifiya Hasnain Kapadia, தந்தை பெயர்: Kuresh Bhagat பிறந்த தேதி: 16.11.1992, 8121, TVH லும்பினி ஸ்கொயர், 127A, பிரிக்ளின் ரோடு, புரசைவாக்கம், சென்னை – 600007, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **ALIFIYA KURESH BHAGAT** என்று அழைக்கப் படுகிறேன்.

Alifiya Hasnain Kapadia

பெயர் மாற்றம்

Napolean, தந்தை பெயர்: Selvanathan பிறந்த தேதி: 02.03.1984, நெ.38, 14வது குறுக்கு தெரு, மந்தைவெளிப்பாக்கம் ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600028, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **NEPOLEAN SELVANATHAN** என்று அழைக்கப்படுகிறேன்.

Napolean

IN THE CHEIF SMALL CAUSES COURT CHENNAI
I.A.NO. 4 / 2021
in
MCOP No. 6074 / 2019

S. விஜியலக்ஷ்மி
க/பெ. சுப்பிரமணியன்
மனுதாரர்/ மனுதாரர்
எதிர்
K.K. புஷ்பா அர்ஜுனன்
நெ.V3, ஆர்டிசியன் சண்முகம் தெரு
அயனாவரம், சென்னை–600 023
1ம் எதிர்மனுதாரர்/
1ம் எதிர்மனுதாரர்

1ம் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு

மேற்படி வழக்கு நெம்பரில் மனுதாரர் மேற்படி நீதிமன்றத்தில் வாகன விபத்து நஷ்டஈடு கோரி மனுதாக்கல் செய்தும் மேலும் மனுதாரர் வாரிசுகளை மனுதாரர்களாக சேர்க்க கோரியும் மனு செய்து நீதிமன்ற உத்தரவின் பேரில் 1ம் எதிர்மனுதாரர் தனது ஆட்சேபணையை தாக்கல் செய்ய 24.6.21 அன்று வாய்தா வைக்கப் பட்டுள்ளது. மேற்படி வாய்தா தேதியன்று காலை 10.15 மணியளவில் தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராக ஆட்சேபணையை தெரிவிக்க வேண்டியது. தவறினால் மேற்படி மனுவில் தங்களை பொறுத்து ஒருதலைபட்சமாக உத்தரவு பிறப்பிக்க நேரிடும் என்பதை இதன் மூலம் அறியவும்.

D. பாஸ்கர்
வழக்கறிஞர்

படிவம் எண். INC-26
கம்பெனிகள் (இணைத்தல்) விதிகள் 2014, விதி 30ன்படி

கம்பெனியின் பதிவு அலுவலகத்தை ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு மாற்றுவதற்காக செய்தித்தாளில் வெளியிட வேண்டிய விளம்பரம்

மத்திய அரசு முன்பாக, தென் பிராந்திய பெஞ்ச், சென்னை

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 13 துணைப்பிரிவு (4) மற்றும் கம்பெனிகள் (இணைத்தல்) விதிகள் 2014, விதி 30 துணைப்பிரிவு (5) உப்பிரிவு (ஏ) விஷயத்தில் மற்றும் மெசர்ஸ் ஆக்ட்1 அகில்1 இந்தியா பிரைவேட் லிமிடெட் (M/s. Act1 Agile1 India Private Limited) பதிவு அலுவலகம், வ்ரா ஜெ.கே. டவர், பழைய எண். 79, புதிய எண். 28, முதல் மாடி, பசுல்லா ரோடு, தி.நகர், சென்னை 600 017 விஷயத்தில்

... மனுதாரர்

சனிக்கிழமை, 1 மே 2021 அன்று நடைபெற்ற அசாதாரண பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சிறப்பு தீர்மானத்தின்படி, கம்பெனியின் பதிவு அலுவலகத்தை **"தமிழ்நாடு மாநிலத்திலிருந்து கர்நாடகா மாநிலத்திற்கு"** மாற்றுவதற்காக கம்பெனியின் மெமோரண்டம் ஆப் அசோசியேஷனில் திருத்தம் செய்வதை உறுதி செய்ய கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 13ன் கீழ் மத்திய அரசுக்கு விண்ணப்பம் ஒன்றை தாக்கல் செய்ய கம்பெனி திட்டமிட்டுள்ளது என்று பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

திட்டமிட்டுள்ள மாற்றத்தினால் எவரது நலமேனும் பாதிக்கப்படுவதாக கருது வாராயின், பாதிக்கப்படும் நலன் மற்றும் எதிர்ப்பதற்கான காரணத்தை அபிவிட்டுடன் இணைத்து எம்சிஏ–21 போர்ட்டலில் (www.mca.gov.in) முதலீட்டாளர் புகார் படிவத்தை தாக்கல் செய்யலாம் அல்லது பிராந்திய இயக்குனரின் முகவரி **டாக்டர் கே. திருமலைமுத்து,** 5வது மாடி, சாஸ்திரி பவன், 26 ஹாடோஸ் சாலை, சென்னை–600 006 அவர்களுக்கு இந்த அறிவிப்பு வெளியான 14 நாட் களுக்குள் நேரடியாக அளிக்கலாம் அல்லது பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம். அதன் நகல் ஒன்றை கீழ்க்குறிப்பிட்டுள்ள முகவரியில் இருக்கும் மனுதாரர் கம்பெனியின் பதிவு அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும்.

பதிவு அலுவலக முகவரி
வ்ரா ஜெ.கே. டவர், பழைய எண். 79, புதிய எண். 28, முதல் மாடி, பசுல்லா ரோடு, தி.நகர், சென்னை 600 017

மனுதாரர் சார்பாக
ஆக்ட்1 அகில்1 இந்தியா பிரைவேட் லிமிடெட்
(Act1 Agile1 India Private Limited)
ஒப்பம்/–
சயான் ராய்
(இயக்குனர்)
DIN: 05287011

தேதி: 07.06.2021
இடம்: சென்னை

Orchid Pharma Ltd.

ஆர்க்கிட் பார்மா லிமிடெட்
CIN : L24222TN1992PLC022994

பதிவு அலுவலகம்: 'ஆர்க்கிட் டவர்ஸ்', #313, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை – 600 034, தமிழ்நாடு, இந்தியா
போன் : +91–44–2821 1000, பேக்ஸ் : +091–44–2821 1002;
இ–மெயில் : corporate@orchidpharma.com; இணையதளம் : www.orchidpharma.com

அசாதாரண பொதுக் கூட்டம், மின்னணு வாக்குப்பதிவு மற்றும் புத்தகம் மூடல் அறிவிப்பு

அசாதாரண பொதுக்கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள சிறப்பு அலுவல் குறித்து பரிவர்த்தனை மேற்கொள்ள ஆர்க்கிட் பார்மா லிமிடெட்டின் (கம்பெனி) உறுப்பினர்களுக்கான அசாதாரண பொதுக் கூட்டம் ("EGM") **செவ்வாய்க்கிழமை, ஜூன் 29, 2021 அன்று காலை 11.30 மணிக்கு (இந்திய நேரப்படி)** பதிவு அலுவலகம், ஆர்க்கிட் டவர்ஸ், எண்.313, வள்ளுவர்கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை 600 034, தமிழ்நாடு (கூட்டம் நடைபெறும் இடம் என கருதப்படுகிறது) என்ற முகவரியில் காணொலி காட்சி ("VC")/பிற ஒலி ஒளி வழிமுறைகள் ("OAVM") மூலம் நடைபெறும் என்று இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது.

உலக அளவில் தொடரும் கோவிட் –19 தொற்று காரணமாக, கார்ப்பரேட் விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் மே 5, 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண்.20/2020, ஏப்ரல் 08, 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண்.14/2020 மற்றும் ஏப்ரல் 13, 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண்.17/2020ன்படி ஒரு பொதுவான இடத்தில் கூட்டத்திற்கு உறுப்பினர்கள் நேரடியாக ஆஜராகாமல் காணொலி காட்சி ("VC")/பிற ஒலி ஒளி வழிமுறைகள் ("OAVM") மூலம் நிறுவனத்தின் அசாதாரண பொதுக்கூட்டத்தை நடத்த அனுமதிக்கிறது. மேலே கூறப்பட்ட சுற்றறிக்கைகளின் அடிப்படையில் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 2013 மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிமுறைகள், 2015 ஆகியவற்றின் விதிமுறைகளுக்கு இணங்க, நிறுவனத்தின் அசாதாரண பொதுக்கூட்டம் VC/OAVM மூலம் நடத்தப்படுகிறது. எனவே, உறுப்பினர்கள் VC/OAVM மூலம் மட்டுமே அசாதாரண பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளலாம்.

மேற்கூறிய எம்சிஏ சுற்றறிக்கைகள் மற்றும் செக்யூரிடீஸ் அண்ட் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியாவின் மே 12, 2020 தேதியிட்ட சுற்றறிக்கையினால் அனுமதிக்கப்பட்ட தளர்வு ஆகியவற்றின்படி, நிறுவனம் அல்லது பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர்கள் அல்லது வைப்புத்தொகை பங்கேற்பாளர்களிடம் பதிவு செய்யப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரியில் உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் மின்னணு வழிமுறைகள் மூலம் மட்டுமே அசாதாரண பொதுக்கூட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. மேற்கண்ட எம்சிஏ சுற்றறிக்கைள் மற்றும் செபி சுற்றறிக்கைகளின்படி, அசாதாரண பொதுக்கூட்ட அறிவிப்பின் காகித நகல்கள் அனுப்புவது கைவிடப்பட்டுள்ளது. உறுப்பினர்கள் அவ்வாறு செய்யவில்லை எனில், உடனடியாக தங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யுமாறு/புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

எ) அந்தந்த வைப்புத்தொகை பங்கேற்பாளர்களுடன் டிமேட் முறையில் பங்குகள் வைத்திருந்தால்

பி) காகித முறையில் பங்குகள் இருந்தால், போலியோ எண் விவரங்களுடன் சுய சான்றளிக்கப்பட்ட பான் அட்டையின் நகலை இணைத்து பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர்களுக்கு (ஆர்டிஏ) yuvraj@integratedindia.inல் மின்னஞ்சல் மூலம் அனுப்பலாம்.

அசாதாரண பொதுக்கூட்ட அறிவிப்பு கம்பெனியின் வலைத்தளம் www.orchidpharma.com, நேஷனல் ஸ்டாக் எக்சேஞ் ஆப் இந்தியா லிமிடெட் வலைத்தளம்www.nseindia.com மற்றும் பிஎஸ்இ லிமிடெட் www.bseinda.comல் உள்ளது என்பதை உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். அவற்றின் நகல் சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீஸ் (இந்தியா) லிமிடெட்டின் (CDSL) (அசாதாரண பொதுக்கூட்டத்தில் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மற்றும் மின்னணு வாக்குப்பதிவுக்கு VC/OAVM வசதியை அளிக்கும் முகவர்) வலைத்தளம் www.evotingindia.com ல் உள்ளது. எந்தவொரு தகவல் தொடர்புக்கும், பங்குதாரர்கள் பின்வரும் மின்னஞ்சல் ஐடிக்கு கோரிக்கைகளை அனுப்பலாம்: nikitak@orchidpharma.com.

கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 108, அவ்வப்போது திருத்தப்பட்ட கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014, இந்திய நிறுவன செயலாளர்களால் வழங்கப்பட்ட பொதுக் கூட்டங்களுக்கான செயலக தரநிலை ("எஸ்எஸ்–2") மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015ன் விதி 44ன்படி, அசாதாரண பொதுக்கூட்ட அலுவல்களின் பரிவர்த்தனைக்காக அசாதாரண பொதுக்கூட்டத்தின் போதும் மற்றும் அதற்கு முன்னரும் உறுப்பினர்கள் மின்னணு முறையில் வாக்களிக்கும் வசதியை கம்பெனி அளிக்கிறது. இதற்காக, மின்னணு முறையில் மூலம் வாக்களிக்கும் வசதிக்காக சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீஸ் (இந்தியா) லிமிடெட்டுடன் ஒரு ஒப்பந்தத்தை கம்பெனி மேற்கொண்டுள்ளது.

மின்னணு வாக்குப்பதிவு: தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மற்றும் அசாதாரண பொதுக்கூட்டத்தில் இணைய விரிவான வழிமுறைகள் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு பற்றி கம்பெனியின் அசாதாரண பொதுக்கூட்ட அறிவிப்பில் அளிக்கப்பட்டுள்ளது. உறுப்பினர்கள் கீழ்க்கண்டவற்றை கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வெள்ளிக்கிழமை, ஜூன் 25, 2021 அன்று காலை 9.00 மணிக்கு (இந்திய நேரப்படி) தொடங்கி திங்கட்கிழமை, ஜூன் 28, 2021 அன்று மாலை 5.00 மணிக்கு (இந்திய நேரப்படி) முடிவடைகிறது.

மேற்சொன்ன தேதி மற்றும் நேரத்திற்கு பின்னர் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவின் மூலம் உறுப்பினர்கள் வாக்களிக்க முடியாது மற்றும் அதன்பின்னர் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு முறையை சிடிஎஸ்எல் செயலிழக்க செய்துவிடும். கூடுதலாக அசாதாரண பொதுக்கூட்டம் நடைபெறும் நேரத்தில் மின்னணு வாக்குப்பதிவு வசதிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவின் மூலம் ஏற்கனவே வாக்களிக்காமல் கூட்டத்தில் ஆஜராகும் உறுப்பினர்கள் அசாதாரண பொதுக்கூட்டத்தின் போது வாக்களிக்க உரிமை உள்ளவர்கள் ஆவார்கள். தொலைதூர மின்னணு வாக்குப்பதிவின் மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் அசாதாரண பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் ஆனால் மீண்டும் வாக்களிக்க உரிமையில்லை.

மின்னணு வாக்குப்பதிவிற்கு கட் ஆப் தேதியான செவ்வாய்க்கிழமை, ஜூன் 22, 2021 அன்று உறுப்பினர்கள் பதிவேடு/வைப்புத்தொகையாளர்களால் பராமரிக்கப்படும் நன்மை பயக்கும் உரிமையாளர்களின் பதிவேட்டில் கண்டுள்ள பெயர்களில் உள்ள உறுப்பினர்கள் அசாதாரண பொதுக்கூட்டத்தில் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு/மின்வாக்களிக்கும் வசதியைப் பெற மட்டுமே உரிமை உண்டு. அறிவிப்பு அனுப்பிய பிறகு ஆனால் வாக்குப்பதிவிற்கான கட் ஆப் தேதியான செவ்வாய்க்கிழமை, ஜூன் 22, 2021 அன்று கம்பெனியின் பங்குகளை பெற்று உறுப்பினரான ஒரு நபர் அவர்களது போலியோ எண்./டிபி ஐடி மற்றும் கிளையண்ட் ஐடி ஆகியவற்றை குறிப்பிட்டு helpdesk.evoting@cdslindia.comக்கு மின்னஞ்சல் அனுப்பி உள்நுழைவு ஐடி மற்றும் பாஸ்வேர்டை பெற்றுக் கொள்ளலாம் அல்லது எங்களின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர்கள் (ஆர்டிஏ), மெசர்ஸ் இன்டக்ரேட்டட் ரிஜிஸ்திரி மானேஜ்மெண்ட் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட், 2வது மாடி, கென்சஸ் டவர்ஸ், எண் 1, ராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் சாலை, தி.நகர், சென்னை 600 017, தமிழ்நாடு, தொலைபேசி: 044–2814 0801–803, மின்னஞ்சல்: yuvraj@integratedindia.inல் அணுகலாம். கட் ஆப் தேதியன்று உறுப்பினராக இல்லாத நபர் இந்த அறிவிப்பை தகவல் நோக்கத்திற்காக மட்டுமே என கருத வேண்டும்.

வாக்களிக்கும் செயல்முறையை (மின்னணு முறையில் அல்லது வேறுவிதமாக) நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் நடத்துவதற்காக CS P முத்துக்குமாரன், பிராக்டிசிங் ந